# நேற்றுக்காலை முதல் ஸ்ரீலங்கா ராணுவம் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்தது!

ஸ்ரீலங்கா அரசு தனது யுத்த நிறுத்தத்தை கைவிட்டதைத் தொடர்ந்து நேற்று முதல் இராணுவம் தனது நடவடிக்கைகளை ஆரம்பிதத்து. நேற்று முன்தினமிரவு கடற்படையினரின் பீரங்கித்தாக்குதலினால் நெடுந்தீவில் மாஸ்டர் (பிருதாவனன்) பருத்தித்துறை வீர மரணமடைந்தார். நேற்று அதிகாலை 5.10 மணிக்கு பலாலி ராணுவ முகாமில் இருந்து வளலாய், ஒட்டகப் புலம், செலவநாயகபுரம் ஆகிய பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இதலால் நவக்கிரியைச் சேர்ந்த மூதாட்டி ஒருவர் காயமடைந்தார். நேற்றுக்காலை 6 30 மணியளவில் பலாலி முகாமிலிருந்து ராணுவத்தினர் கடும் ஷெல் தாக்குதலுடன் சட்டுவன், குரும்பசிட்டி காவலரண்களை நோக்கி முன்னேறினர். இதனால் பெண் போராளி வைதேகி வீர மரணமடைந்தார் ஆறுபோராளிகள் காயமுற்றனர். இதேவேளை மாவிட்டபுரத்தில் நடந்த தாக்குதலிலும் போராளி ஒருவர் காய —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 46 பிரமோதூத மார்கழி 28 (12-01-1991) சனி

## ‘அஸ்பிறின்’ பாவிப்பதால் குழந்தைகள் இருதயம் பலவீனமாகிறது

யாழ் மாவட்டத்தில் உள்ள பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தற்போது இருதயபலவீனம், மற்றும் நரம்பு தளர்ச்சி ஏற்பட்டு வருவது அதிகரித்து வருவதாக மருத்துவவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குடாநாட்டில் சாதாரண காய்ச்சலுக்கு பயன் படுத்தப்படும் பனடோல் குளிகைக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாலும் பெற —04 ஆம் பக்கம் பார்க்க

## ● ஐந்து நிபந்தனைகளை விதித்து

# யுத்த நிறுத்தத்தை நீடிக்க அரசு மறுப்பு!

## “தைப்பொங்கலன்று மட்டும் தாக்குதல் இல்லை!”

விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடந்த ஏழு நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராணுவ நடவடிக்கைகளை மேலும் நீடிக்க முடியாது என ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது. ஆனால் தைப்பொங்கல் தினமான எதிர்வரும் திங்கள் மட்டும் தாக்குதல்கள் இல்லையாம்.

நேற்று முன் தினமிரவு ஜனாதிபதி பிரேமதாஸ 14 எதிர்கட்சிகளைக் கலந்தாலோசித்துநிலைமையை மதிப்பிட்ட பின்னரே இந்த முடிவு அரசினால் எடுக்கப்பட்டதாக பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்றுக் காலை தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அரசு விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதானால் பின்வருமநிபந்தனைகளை புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

★பேச்சுவார்த்தைகளுக்கு புலிகளின் அரசியல் பிரிவு அல்லாது இராணுவப் பிரிவே கலந்து கொள்ள வேண்டும்

இதனடிப்படையில் புலிகளின் இராணுவத்தலைவர் பிரபாகரன் தான் பேச்சுவார்த்தை நடத்த வரவேண்டும். —04 ஆம் பக்கம் பார்க்க

## தனியார்கல்வி நிலையங்கள் புதிதாக ஆரம்பிக்கத் தடை

தனியார் கல்வி நிலையங்கள யாழ் மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியம் இவ்அறிவித்தலை விடுத்துள்ளது.

தற்போதுஇயங்கிவரும்தனியார் கல்வி நிலையங்களும் சில நியதிகளுக்கு அமைய நடந்து கொள்வதற்கான சுற்று நிருபங்களும் வெளியிடப்பட்டுள்ளன. (66)

## ஆனையிறவில் வான் தாக்கு நான்கு கடைகள் சேதம்

ஆனையிறவு குறிஞ்சாத்தீவு உப்பளப் பகுதியிலும் இயக்கச்சி சந்தியிலும் நேற்று காலை மூர்க்கத்தனமான வான் தாக்குதல்கள் இடம் பெற்றன.

பொம்மர், வை 12 சீன விமானம் அவ்ரோ ஆகியவை இத்தாக்குதலில் ஈடுபட்டன.

இதனால் இயக்கச்சி சந்தியில் உள்ள நான்கு கடைகள் தரைமட்டமாகியதுடன் வீடுகளும் மகா வித்தியாலயமும் சேதமடைந்தன. (ப-3)

## பலாலிப் பகுதியில் தாக்குதல் ஆறுபேர் படுகாயமடைந்தனர்

நேற்று அதிகாலையிலிருந்து பலாலி முகாமிலிருந்தும கட்டுவனில் இருந்தும் தொடர்ச்சியாகப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் ஆறுபேர் காயமடைந்தனர்.

க. வைரமுத்து 40-ஈவினை), அ. யோகநாதன்(44-சூராவத்தை), கொலஸ்ரிகா(22-ஏழாலை), கலாநிதி(30-ஏழாலை), இந்திராணி(40-புத்தூர்) ஆகிய ஆறுபேர் படுகாயமடைந்து யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (74)

## அனலைதீவுக்கடலில் கைதானோர் நேற்று முன்தினம் விடுவிப்பு

மாதகலில் இருந்து இந்தியாவுக்குச் சென்ற அகதிகள் படகொன்றை கடற்படையினர் அனலைதீவுக் கடலில் வைத்துக் கைப்பற்றினர்.

இதில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12 பேரும் கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

கடந்த எட்டு நாட்கள் முகாமில் சித்திரவதைகளுடன் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் நேற்று முன் தினம் குறிகாட்டுவான் துறையில் விடுவிக்கப்பட்டனர் (ப-11, 20)

## பாராளுமன்றம் 15 நிமிடம் ஒத்திவைப்பு

## இந்திய பிரதமர் உரையை எதிர்த்து சபையில் கலாட்டா

இலங்கைத் தமிழ் போராளிகள் குறித்து இந்தியப் பிரதமர் சந்திரசேகர் நேற்று முன்தினம் வெளியிட்ட கருதது தொடர்பாக நேற்று இநதிய பாராளுமன்றத்தில் பெரும் கூச்சலும் குழப்பமும் நிலவியது.

தேசிய முன்னணிகட்சியினரும், அ. தி. மு. க வினரும் பலத்த வாக்குவாதத்தில் இறங்கினர். இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் தி.மு —04 ஆம் பக்கம பார்க்க

## கடலில் பிடிபட்ட யாழ் வாசிகள் மன்னாரில் விடுவிக்கப்பட்டனர்

கடந்த ஒக்டோபர் 10ஆம் திகதி இந்தியாவுக்கு படகில் சென்றபோது கச்சதீவுக் கடலில் வைத்து கடற்படையினரால் பிடிக்கப்பட்ட யாழ் வாசிகளான கிருஸ்ணசாமி கஜேந்திரன் (35) கோணாந்தோட்டம், மணியம் தோட்டத்தைச் சேர்ந்த மாணிக்கம் மன்மதன்(37), சிலுவை தங்கராசா (30) ஆகியோர் இம்மாதம் 9 ஆம் திகதி திருக்கேதீஸ்வரத்தில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களுடன் பிடிபட்ட மூன்று இந்தியத் தமிழர்களும் பத்து நாட்களின்பின் விடுவிக்கப்பட்டனர்,

இவர்கள் மன்னாரில் இராணுவத்தினரின் எடுபிடி வேலைகள் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது ஏற்கனவே கைதான 22 பேர் இவர்களுடன் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது (ப-35)

## வவுனியாவில் ஷெல் வீச்சு

வவுனியாவில் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் நேற்றுககாலை வரை படையினர் ஷெல் தாக்குதல்களையும் துப்பாக்கிப் பிரயோகத்தை —04 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ நடவடிக்கையில் இறந்த மாணவர், ஆசிரியர் விபரம் சேகரிப்பு

இராணுவ நடவடிக்கை காரணமாக இறந்த, அல்லது கடுமையான காயங்களுக்கு உள்ளாகி ஊனமுற்ற மாணவர்கள், ஆசிரியர்களின் விபரங்களை யாழ் கல்வித் திணைக்களம் சேகரித்து வருகிறது

இது தொடர்பான சுற்று நிருபம், சகல கோட்டக்கல்வி — 04ஆம் பக்கம் பார்க்க

## மாடுகட்டிய வாக்குவாதம் கத்தி வெட்டில் முடிந்தது

வளவினுள் மாடு கட்டிய பின் ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் கத்திவெட்டில் முடிவடைந்தது.

நேற்றுப் பிற்பகல் அளவெட்டியில் த தம்பிராஜா (49 என்பவர் தனது வீட்டு வளவினுள அயலவர் ஒருவர் மாடு கட்டியதைக் கண்டு அதை வெளியே கொண்டு செல்லுமாறு கேட்கப்பட்டபோது அயலவரான இ.குமார் என்பவர் தம்பிராஜா வைத்திருந்த கத்தியை பறித்து அவரை வெட்டியபோது தம்பிராஜா தோள், கைகளில் பலத்த காயமடைந்தார்.

இவர் தற்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ப-11)

## கிழக்குப்பகுதி மக்களுக்கு கல்விப்பகுதி நிதியுதவி

கிழக்குப் பகுதி மக்களின் துயர்துடைப்பு புனர்வாழ்வு நிதிக்காக யாழ் மாவட்டத்திலுள்ள கல்விக் கோட்டங்கள் மற்றும் கல்வி ஸ்தாபனங்களால் ஆறுலட்சத்து 42 ஆயிரத்து 714 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மருதனாமடம். யாழ்ப்பாணம், தென்மராட்சி. பண்டத்தரிப்பு, வடமராட்சி, ஆகிய கோட்டங்களினால் 5,96,374 ரூபாவும், யாழ் பல்கலைக்கழகத்தினால் 20100 ரூபாவும், பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியினால் 21800 ரூபாவும், தொழில் நுட்பக் கல்லூரியால் 4440 ரூபாவும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கல்விப்பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது (66)

## மருதனாமடத்தில் மரணதண்டனை

நேற்றுக் காலை 8 மணியளவில் மருதனார்மடச் சந்தியில் சமூக, தேச விரோதச் செயல்கள் புரிந்தமைக்காக கோப்பாய் வடக்கு இராச வீதியைச் சேர்ந்த அப்பாக்குட்டி தனபாலு(43) என்பவ —04 ஆம் பக்கம் பார்க்க

## கிளி மருத்துவ மனைக்கு 54 ஆயிரம் நிதி உதவி

கிளிநொச்சி ஆஸபத்திரிக்கு புனரமைப்புக்கு ‘ஒக்ஸ்பாம்’ நிறுவனம் 54 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

கடந்தகால இராணுவ நட —04 ஆம் பக்கம் பார்க்க

## 'ஏஸியாவீக்'குக்குத் தடை! சிப்பாயின் காதலி காரணமாம்

சிலவாரங்களுக்கு முன்னர் வெளியான 'ஏஸியாவீக்' சஞ்சிகையை இலங்கையில் விற்பனை செய்வதற்கு அரசு தடைவிதித்துள்ளது.

அச்சஞ்சிகையில் பிரசுரமாகியிருந்த ஒரு கலர்ப் புகைப்படமே இத்தடை விதிப்புக்குக் காரணமாம்.

மோதலின் போது கொல்லப்பட்ட சிங்களச் சிப்பாய் ஒருவரின் கோல உடைக்குள் இருந்த பொருட்களை போராளி ஒருவர் சோதிப்பதனையும், அதற்குள் சிப்பாயின் காதலியின் புகைப்படம் இருப்பதனையும் விளக்கும்வகையில் இந்த சஞ்சிகையில் வெளியான புகைப்படம் அமைந்திருந்ததாம்.

இச்சஞ்சிகையை தடைசெய்தவிவகாரம் பாராளுமன்றத்திலும் எதிரொலித்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ் பல்கலைக்கழகத்தில் 413 மாணவர்கள் 'மெரிட்' சிறப்புப் பரிசுக்குத் தெரிவு!

1989—90-ம் கல்வியாண்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெற்ற மாணவர்களுள் அதிக புள்ளிகளைப் பெற்று 'மெரிட்' தெரிவு கிடைத்துள்ள மாணவர்களின் பட்டியல் உயர்கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி யாழ் பல்கலைக்கழகத்தில் கலை, பௌதிகவியல், உயிரியல், விவசாயம், முகாமைத்துவம், வர்த்தகத்துறைகளில் 413 மாணவர்கள் 'மெரிட்' சிறப்பு புலமைப்பரிசில் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 64 பேர் மாவட்ட ரீதியாக அதி கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. மருத்துவ பீடத்தில் 'மெரிட்' புலமைப்பரிசிலுக்கு எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

1989-90ஆம் கல்வியாண்டில் கலைப்பீடத்தில் 11 மாணவர் 'மெரிட்' புலமைப்பரிசுக்கும் 140 பேர் மகாப்பொல புலமைப்பரிசுக்கும் தெரிவாகியுள்ளனர்.

பௌதிகவியல் பீடத்தில் 21 மாணவருக்கு 'மெரிட்' அதிசிறப்பு புலமைப் பரிசும், 73 பேருக்கு மகாப்பொல புலமைப்பரிசும் வழங்கப்படவுள்ளன.

உயிரியல் பீடத்தில் 9 மாணவர்கள் 'மெரிட்' புலமைப் பரிசுக்கும், 30 பேர் மகாப்பொல புலமைப்பரிசுக்கும் தெரிவாகியுள்ளனர்.

மருத்துவ பீடத்தில் 48 மாணவர்கள் மகாப்பொல புலமைப் பரிசுக்கு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

விவசாய பீடத்தில் இருவருக்கு 'மெரிட்' புலமைப்பரிசும், 14 பேருக்கு மகாப்பொல புலமைப்பரிசும், முகாமைத்துவப் பீடத்தில் 4 மாணவர்களுக்கு 'மெரிட்' புலமைப் பரிசும், 63 பேருக்கு மகாப்பொல பரிசும் வழங்கப்படவுள்ளன.

வர்த்தகப்பீடத்தில் 19 மாணவர்களுக்கு 'மெரிட்' புலமைப்பரிசிலும், 59 பேருக்கு மகாப்பொல புலமைப்பரிசிலும் கிடைத்துள்ளன. (ப11)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மொஸ்கோ வைத்தியசாலையில் யாழ் பெண் டாக்டர்

யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்மணி ஒருவர் மொஸ்கோவிலுள்ள அரசினர் வைத்திய மனையில் டாக்டராகக் கடமை புரிகிறார்.

யாழ்ப்பாணம் சப்பல் வீதியைச்சேர்ந்த செல்வி பெபெச் சுபா போர்மன் மொஸ்கோவிலுள்ள லுமும்பா பல்கலைக் கழகத்தில் டாக்டர் இறுதிப் பரீட்சையில் சிறப்புச் சித்தி யெய்தி ''றெட் டிப்பு ளோமா'' என்ற விருதையும் பெற்றதனால் சோவியத் அரசாங்கம் அவருக்கு அந் நாட்டிலேயே நியமனம் வழங்கி அன்னாரைக் கௌரவித்திருக்கிறது.

## வைத்தியசாலையில் மருந்து இல்லை

பண்டதரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது'

பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை சில்லாலை ஆகிய இடங்களில் இடம்பெயர்ந்து வந்து அகதிகளாக தங்கியிருக்கும் மக்களும் சிகிச்சைக்காக இந்த வைத்தியசாலையையே நாடி வருகின்றனர். தினமும் இரு நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற வருகின்ற போதிலும்மருந்துத் தட்டுப்பாடு காரணமாக பூரணத்துவமான வைத்திய சேவைகளை வழங்க முடியாதிருப்பதாக அறியப்படுகின்றது. (13)

## சதிகாரர்களுடன் தொடர்பாம் பெண் சப் இன்ஸ்பெக்டர் கைது

அமைச்சர் ஒருவரின் பாதுகாப்புப் பிரிவைச்சேர்ந்த இரு பொலிஸார் சட்டவிரோத மரக்கடத்தல் தொடர்பாக விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

நிக்கவெரட்டியா நெலஹெர காட்டுப்பகுதியில் இடம்பெற்ற இக்கடத்தல் தொடர்பாக மேலும் பல பொலிஸார் விசாரணைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை பொலிஸ் ரிசேர்வ் தலைமையகத்தைச் சேர்ந்த பெண் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் சதிநாசகார நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

## துப்பாக்கி பிடிக்கத் தெரியாத சிப்பாய்க்கு நேர்ந்த கதி

துப்பாக்கியை சரியாகக் கையாளத்தெரியாத இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிர் இழந்ததாக அறிவிக்கப்படுகிறது. வான்எலப் பகுதியில் ஆலடி முகாமைச் சேர்ந்த (புதிதாகத் திரட்டப்பட்ட) இராணுவச்சிப்பாய் ராஜ்சிங்க தனது துப்பாக்கியைத் தவறாகக்கையாள அது வெடித்து இறந்தார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## கொத்தணி அதிபர்களுக்கு விசேடஅலவன்ஸ் நிறுத்தம்

கொத்தணி அதிபர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் 'விசேட அலவன்ஸ்'' இருநூறு ரூபாய் இவ்வாண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

இந்த விசேட கொடுப்பனவு வழங்கப்படும் பண ஒதுக்கீடு நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து அறிவிக்கப்படடுள்ளது.

இது தொடர்பான சகல விபரங்களும். சகல கொத்தணிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (74)

## 'தரப்படுத்தல்'இப்படித்தொடர்கிறது! ஆய்வுகூடங்களில் எதுவும்இல்லை

யாழ் மாவட்டப்பாடசாலைகளின் ஆய்வு கூடங்களுக்குச் செய்முறைப் பயிற்சியினை மேற்கொள்வதற்காக 1982-ஆம் ஆண்டுக்குப் பின்பு இதுவரை காலமும் எவ்வித இரசாயனப் பொருட்களும், இரசாயன உபகரணங்களும் கல்வி அமைச்சாலோ, அன்றி கல்வி அமைச்சின் அனுசரணையுடனான அமைப்புக்ளாலோ வழங்கப்படவில்லை.

இதனால், யாழ் மாவட்டப் பாடசாலைகளின் உயர் வகுப்பு மாணவர்களுக்கான செய்முறைப் பயிற்சி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

செய்முறைப் பயிற்சி இன்றியே அதிக புள்ளிகளைப் பெறும் மாணவர்கள், செய்முறைப் பயிற்சி மேற்கொள்ளப்படின் மேலும் அதிகபுள்ளிகளைப் பெற்றிருக்க முடியுமென விஞ்ஞான ஆசிரிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (32)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

வெள்ளையன் சதாசிவம் இல. 582801967X எனும் பெயருள்ள தேசிய அடையாளஅட்டை பூநகரிக்கும் நாவற்குழிக்குமிடையில் 4 - 1 - 91 வெள்ளிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தோர் V சதாசிவம், வரப்பிரகாசம் ரெக்ஸ், இல. 31B, நவீன சந்தை, சுன்னாகம் எனும் விலாசத்தில், ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். 01098

### புத்தகம்

B. Com, HNDA, A/L, மற்றும் துறைசார் கணக்கியல் மாணவர்களுக்கான, நியமக்கிரயவியல்- பா. பாலச்சந்திரன். அடிப்படைக் கணக்கியற் கோட்பாடுகள்- நல்லையா குமரகுருபரன். விவரணப் புள்ளிவிபரவியல்- செல்லையா இளங்குமரன், சில பிரதிகள் மட்டுமே கைவசம். வியாபாரக் கழிவுகள் உண்டு. விநியோகம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீகாந், நல்லூர், சிவா மெடிக்கல்ஸ், சாவகச்சேரி. 01092

## யாழ்மாவட்டத்தில்வீடுகள் அமைக்க 46 லட்சம் ரூபா நிதிஒதுக்கீடு

யாழ் மாவட்டத்தில் வீடுகளை அமைப்பதற்குக் கடன் வழங்குவதற்காக 46லட்சத்து 27 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பதினைந்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 1991 ஆம் ஆண்டிற்காகத் தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்நிதியில் கிராமிய வீடமைப்புக் கடனாக 24 லட்சத்து 63 ஆயிரமும், நகர வீடமைப்புக் கடனாக 21 லட்சத்து 64 ஆயிரமும் யாழ் மாவட்டத்திற்கென வழங்கப்பட்டுள்ளதாக இவ்வதிகார சபையின் யாழ் பிராந்திய அலுவலக முகாமையாளர் தெரிவித்தார். (66)


## பாடசாலைகளில் 900 வெற்றிடங்கள்! விரைவில் நிரப்ப நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் விசேட திட்டத்தின் கீழும் சாதாரண நடைமுறையின் படியும் ஏறத்தாழ 700 ஆசிரியர்கள் ஓய்வுபெற்றுள்ளனர்.

இத்துடன் சுமார் 120 ஆசிரியர்கள் முதலாம் இரண்டாம் தரப்பதவி உயர்வு பெற்று அதிபர்களாகவும் பிரதி அதிபர்களாகவும் நியமனம் பெற்றுள்ளனர். இதனால் மொத்தமாக 900 ஆசிரியர்களது இடங்கள் காலியாகவுள்ளன.

இத்தகைய வெற்றிடங்கள் தற்போது வெளிமாவட்டத்தில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு மாற்றப் பெற்று வரும் ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்படுமென யாழ் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (32)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. வயிரமுத்து செல்வராஜா (யோவான்)

| மண்நாடலங்கரித்த நாள் | திருநாடலங்கரித்த நாள் |
|---|---|
| 24 - 09 - 1953 | 12 - 01 - 1990 |

ஆண்டொன்று கழிந்ததையா
ஆண்டவர் பாதம் நீர் சென்று
ஆயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்
ஆறிடுமோ உம் நினைவு

உள்ளம் அழுகுதைய்யா — உம் நினைவு
உள்ளத்தை வாட்டுதைய்யா
உலக நாயகர் இயேசுவின் கிருபையோ - எம்
உள்ளத்தைத் தேற்றுதைய்யா

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள், அப்பா, அம்மா, மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணன், தம்பிமார், உற்றார், உறவினர்.

பொற்பதி றோட்
கொக்குவில் கிழக்கு 01093

# வாக்காளர்பதிவு 3 வருடமாக இல்லை
# வடக்கு கிழக்கில் 1 லட்சம் பேர் பாதிப்பு

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பதினெட்டு வயதையடைந்த சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர்களது பெயர்கள் வாக்காளர் இடாப்புகளில் பதிவு செய்யப்படவில்லை.

1987 ஆம் ஆண்டிருப் பின்னர் இடம் பெற்று வந்த இராணுவ நடவடிக்கைகள் காரண மாக இம் மாவட்டங்களில் வாக்காளர் பற்றிய திருத்தங்களோ, புதிய பதிவுகளோ எதுவும் இடம் பெறவில்லையெனத் தெரியவருகிறது.

இதனால் 18 வயதையடைந்தவர்கள் தேசிய அடையாள அட்டையைப் பெறுவதிலும் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதிலும் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் மட்டும் அறுபதினாயிரத்திற்கும் அதிகமானோர்களது பெயர்கள் இவ்வாறு வாக்காளர் இடாப்பில் இடம் பெறாதது இங்கு குறிப்பிடத்தக்கது. (66)

## லக்கியின் அகால மரணத்தை சூட்லக் என்கிறார்கள் காலி மக்கள்

திருகோணமலையில் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்டு, கடந்த மாதம் விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் கொல்லப்பட்ட பிரிகேடியர் லக்கி விஜயரட்னாவைப் பற்றி காலிப்பகுதியில் பல சுவரொட்டிகள் தற்பொழுது ஒட்டப்பட்டுள்ளன.

காலி மாவட்டத்தைச் சேர்ந்த இவரே, அப் பகுதியைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் படையினால் கைது செய்யப்பட்டு 'காணாமல்' போனதற்கு காரணமெனவும், அதற்கான தண்டனை தற்போது அவருக்கு கிடைத்துவிட்டதெனவும் இந்த மர்மச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

இந்தச் சுவரொட்டிகளை ஜே.வி.பி. இயக்கத்தினரே ஒட்டியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## இணக்கமன்று விசேட கூட்டம்

தென்மராட்சிப் பிரிவுக்குட்பட்ட இணக்கமன்று உறுப்பினர்கள், பொறுப்பாளர்களுக்கான விசேட கருத்தரங்கு இன்று 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★

வலிகாமம் பிரிவுக்குட்பட்ட இணக்கமன்றுகளின் உறுப்பினர்கள், பொறுப்பாளர்களுக்கான விசேட கருத்தரங்கு இன்று 12ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்குச் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

## சாவகச்சேரியில் நியாயவிலைக் கடை

சாவகச்சேரி பல நோக். கூ சங்கம் சாவகச்சேரி சந்தையின் உள்ளே நியாயவிலைக் கடை ஒன்றை நேற்று முதல் திறந்துள்ளது.

இக்கடையில் சகல மரக்கறி வகைகளும், சில உலர் உணவுப் பொருட்களும், வேறு அத்தியாவசியப் பொருட்கள் தனியார் கடைகளைவிட மலிவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. (ப-32)

## போலி மரணச்சான்றிதழ்கள்! பரிசோதனையில் பலர் அகப்பட்டனர்

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மரணமடைந்தமைக்கான நஷ்டஈடுகோரி யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவுக்கு விண்ணப்பித்தவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட மரணச் சான்றுப் பத்திரங்களிற் பல போலியானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

விண்ணப்பப்பத்திரங்களோடு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்த மரண அத்தாட்சிப் பத்திரங்கள் சரியானவையா என்பதை உறுதிப்படுத்துவதற்கு யாழ் மாவட்ட மேலதிகப் பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட போது அவற்றில் அறுபத்தைந்துக்கும் அதிகமானவை போலியானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (66)

## வாழ்க்கைச்செலவு உயர்வை எதிர்த்து கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

வாழ்க்கைச்செலவு உயர்வு, அடிப்படை மனிதஉரிமை மீறல் ஆகியவற்றை எதிர்த்து இந்த வருடத்திலும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்க் கட்சியினர் திட்டமிட்டுள்ளனர்

முதல் நடவடிக்கையாகக் கொழும்பில் ஒரு லட்சம் ஆதரவாளர்கள் கொண்ட மாபெரும் ஆர்ப்பாட்டக் கூட்டம் ஒன்று இம்மாத இறுதியில் நடாத்தப்படவுள்ளது.

மலைநாட்டிலும் சத்தியாக்கிரகம் ஒன்று நடாத்தப்படவுள்ளது. அத்துடன் அண்மைக்கால நடவடிக்கைகளின் போது காணாமற் போனவர்களின் அன்னைமார் பங்குபற்றும் கூட்டம் ஒன்றும் கொழும்பில் நடைபெறவுள்ளது.

## நட்புநாடி நெடுந்தொலைவு கடந்து நம்நாடு வரும் சைபீரியப் பறவைகள்

சோவியத் ரஷ்யாவின் சைபீரியாப் பகுதியைச் சேர்ந்த கொக்கு இனத்தின் இப்பறவைகள் தற்பொழுது வடகுதியில் கூட்டம் கூட்டமாகப் பெருமளவில் காணப்படுகின்றன.

'சைபீரியன் பறவைகள்' எனச் செல்லமாக அழைக்கப்படும் இப்பறவைகள் வருடா வருடம் நவம்பர் மாதத்திற்கும் ஏப்ரல் மாதத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சீதோஷ்ண நிலையைக் கருததில் கொண்டு சுமார் பத்தாயிரம் மைல்களைத்தாண்டி வருகின்றமை தெரிந்ததே.

இந்த சைபீரியன் பறவைகளைப்பற்றி பல புதிய தகவல்கள் இடபோது கிடைத்திருக்கின்றன.

இப்பறவைகள் கடல்நீரும் மழைநீரும் சம அளவில் கலக்கும் ஓடைக் கடல் பகுதியில் காணப்படும் ஒரு வகைத் தாவரக் கிழங்கையே விரும்பி உண்ணுகின்றனவாம்.

மாமிச உணவின்பால் நாட்டமற்ற இந்தச் சைபீரியன் பறவைகள் தாவர உணவை மட்டுமே உணவாகக் கொள்கின்றமையும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சைபீரியாவில் பெருமளவில் காணப்படும் இப்பறவைகளை அங்குள்ளோர் பிடித்து பொழுது போக்கா அவற்றின் கழுத்தில் தமது முகவரி அட்டைகளைப் பொருத்தி விடுவார்கள்.

இந்த முகவரி அட்டைகளைத் தாங்கிய பறவைகளை பிறநாடுகளில் உள்ள எவராவது பிடிக்க நேர்ந்தால் அவர்கள் குறித்த முகவரியாளர்களுடன் தொடர்பு கொண்டால் அவர்களுக்குப் பரிசுப்பொருட்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனவாம்.

## பாடசாலைகளில் விஞ்ஞான தினம்

இவ்வருடம் முதல் தமிழ் மாவட்டப் பாடசாலைகளில் விஞ்ஞானப் பொருட்காட்சி ஒவ்வொரு மட்டத்திலும் மேற்கொள்ளப்படவுள்ளது

இதற்காக பாடசாலை மட்டத்திலும் கொத்தணி கோட்ட, மாவட்ட, மாகாண மட்டங்களிலும் விஞ்ஞானத் தினம் அனுஷ்டிக்கப்பட்டுப் போட்டிகள், செயற்திட்டங்கள் நடாத்தப்படவுள்ளன.

ஏற்கனவே ஆங்கிலத்தினம், தமிழ்த்தினம் என்பன மேற்படி மட்டங்களில் நடாத்தப் படுவதுபோலவே விஞ்ஞான தினமும் நடாத்தப்படவுள்ளதாக விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (32)

## உடற்கல்வி கருத்தரங்கு

யாழ் மாவட்டத்தில் அண்மையில் தெரிவாகிய உடற்கல்வி ஆசிரியர்களுக்கு உடற்கல்வித் துறையில் பயிற்சி அளிப்பதற்காக ஐந்து நாள் வதிவிடக் கருத்தரங்கும், செயலமர்வும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன.

மேமாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ள இவ்வதிவிடச் செயற்திட்டக் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை யாழ் கல்வித் திணைக்களத்தின் உடற் கல்வித்துறைக் கல்வி அதிகாரி மேற்கொண்டுள்ளார். (32)

தமிழக அரசியல்

## தமிழ்நாட்டு அரசியல் தலைவிதி

இருபதாம் நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டையும், கடந்த பத்தாண்டையும் தமிழக அரசியலூடாகப் பார்த்து விமர்சிக்கப்பட்ட கட்டுரை.

இந்த நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டுகள் தொடங்கியிருக்கிறது. இவ்வேளை கடந்த பத்தாண்டுகளின் தமிழக அரசியலைக் கொஞ்சம் திரும்பிப் பார்த்தால் நிரலிடக் கூடிய நிகழ்ச்சிகள் எத்தனையோ உண்டு.

கடந்த பத்தாண்டுகளிலும், வரப்போகும் பத்தாண்டுகளிலும் தமிழக அரசியல் போக்கை நிர்ணயிக்கும் சக்திகளாகக் கடும் பாதிப்பை ஏற்படுத்தியது யாரென்று கேட்டால் ஒன்று எம். ஜி ஆர்.! மற்றையது ஈழம்.

1980 முதல் 1987வரை எம் ஜி ஆரும், '983 முதல் இன்று வரைஈழமும்தான் தமிழக மக்களின் சிந்தனையை ஆக்கிரமித்த விஷயங்கள்.

எம் ஜி. ஆரைப் போல இன்னோர் அரசியல், சமூக, கலாசார சக்தி இனி ஒருபோதும் வரமுடியாது என்று அவர் இரசிகர்களும், விமர்சகர்களும் ஏன் எதிரிகளும் கூட கருத்து வேறுபாடின்றி ஒப்புக் கொள்வார்கள்.

அரசியலில் எம் ஜி ஆர். என்றதும் பச்சை குத்துவது, சத்துணவு, சாராயம், பத்திரிகை அவதூறுச் சட்டம், ஜெயலலிதா என்று சம்பந்தா சம்பந்தமில்லாமல் நினைவில் பல விஷயம் அணிவகுக்கும்.

1980க்குப் பின் எம் ஜி ஆர். ஆட்சியில் ஆக்கிரமித்த முக்கிய அம்சங்கள் - சத்துணவு, சாராயம், ஜெயலலிதா, ஈழம் என்பன இவையே அடுத்த பத்தாண்டு அரசியல் பற்றிய கேள்விகளுடன் சம்பந்தபபட்டிருக்கின்றன.

சத்துணவும், சாராயமும் அவர் ஆட்சியில் கொண்டிருந்த அணுகுமுறையின் இரண்டு அடையாளங்கள், அவர் தனக்கு ஆதரவு நல்கிய மக்களுக்குத் தன் நன்றிக் கடனாக வழங்கிய நிவாரணங்களின் அடையாளமாகச் சத்துணவைப் பார்க்க வேண்டும்.

இன்றைய அரசியல் ஜனநாயக அமைப்பை எம் ஜி ஆர் தான் துல்லியமாகப் புரிந்து வைத்திருந்தார் என்றே சொல்லலாம். இதில் இரண்டுதான் சாத்தியம். கொள்ளை அடிப்பதும் முடியும், வள்ளலாக இருப்பதும் முடியும். அடிப்படை மாற்றங்களைச் செய்ய முடியாது.

இவர் ஆட்சியில் ஊழல், நிவாரணம் இரண்டுமே தாராளமாக நடந்தன. இரண்டையுமே ஒரு கலையாக, விஞ்ஞானமாக மாற்றுவது அந்த ஏழாண்டுகளில் முழுமையாக நடந்தது.

நறுக்காகச் சொல்லப் போனால் எம் ஜி ஆர். ஆட்சிக் காலத்தில் ஊழல், இலஞ்சம் ஜனநாயகப்படுத்தப்பட்டது. முகவரி இல்லாத மனிதர்கள் கூட எம் ஜி. ஆர் புகழ் நிழலில் பணக்காரராக முடிந்தது.

இவரால் விட்டுச் செல்லப்பட்ட இவ்விரு "பண்புகளுமே" இன்றும் கருணாநிதிக்கும், தி மு க. வுக்கும் சிக்கலாகவுள்ளன. பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழக மக்கள் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட "அரசாங்கப் பிச்சை, அதிகாரத் துஷ்பிரயோகம்" என்ற இரண்டையும் நீக்க முடியாமலும், வளர்க்க முடியாமலும் இன்று தி. மு. க திண்டாடுவதாகச் சொல்லலாம். இன்று பல அரசியல் கட்சிகளின் ஒவ்வொரு சாதாரண தொண்டனும் கூட "தலைவர் நமக்கு என்ன வழி சொல்வார் வருமானத்துக்கு" என்று ஏங்குவதும், பகிரங்கமாகப் பேசுவதும் பத்தாண்டு கால அரசியல் நடைமுறையின் விளைவுகளதான்.

## எம் ஜி. ஆர். சாதனையில் ஒன்று

மக்களின் வசீகரத்துக்குரியவராக இருந்தவர் எம் ஜி. ஆர் அந்த நேரத்தில் ஒரு "அட்வென்சரிஸ்ற்"— துணிச்சல்காரராகவும் இருந்தார் அந்தத் துணிச்சல், மனவலிமை அவருக்கு நோயுற்ற காலத்தில போராட உதவியது போலவே ஈழப்பிரச்சினையிலும் வெளிப்பட்டது ஈழப்பிரச்சினையிலுள்ள அரசியல நுணுக்கங்கள், வரலாற்று உண்மைகள் முதலியவற்றின் அடிப்படையில் ஈழப்போராளிகளை அவர் ஆதரித்தார் அதைவிட, ஒரு சாகசப்பிரியனின் உற்சாகத்தோடு பிரபாகரனின் இரசிகனாக விளங்கினார் என்றே சொல்லலாம். மத்திய அரசுடன் நண்பனாக இருந்து கொண்டே அந்த நட்பு முறியாமல் மத்திய அரசு எதிர்த்த புலிகளுக்கு எம் ஜி ஆர் உதவி செய்து வந்தது கடந்த பத்தாண்டின் அரசியற் சாதனையாகவே குறிக்கப்படும்.

எம். ஜி. ஆர். மறைவுக்குப் பின் தமிழக ஆட்சியைப் பதின்மூன்று வருடங்களுககுப் பின் மீண்டும் கைபபற்றியது கருணாநிதியின் அரசியல் பொறுமைக்கும். முதிர்ச்சிக்கும் அடையாளம் எனலாம் ஆனால் இந்தப் பதின்மூன்று வருட காலத்தில் தமிழ்ச் சமூகம் எம். ஜி. ஆராலும், ஈழப்பிரச்சினையாலும் தலைகுப்புறப் புரட்டிப போடபபட்டதன் விளைவுகளை அவர் சந்தித்தாக வேண்டியுள்ளது.

அந்த விளைவுகளில் ஜெயலலிதா அரசியல் பிரவேசமும் ஒன்று. வெகுஜன ஆதரவு, வசீகரம் என்ற ஒரே பலததில் வேரூன்றிய ஆருடன் அரசியல் ரீதியாக எவையும் மோத இயலவில்லை. அவரும் தவிர்த்துக்கொண்டார் மக்கள் நம்பிக்கை ஒன்றுதான் அடிப்படையானது. மக்கள் ஒருவரை நம்புகிறார்கள். ஏன், எதற்காக என்ற ஆராய்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட நம்பிக்கையாக அதை எம். ஜி ஆர். மாற்றி விட்டார் இதன் தொடர்ச்சிதான் ஜெயலலிதா அரசியலும் தி. மு. கவுக்கு எதிராக அரசியல் ரீதியான போராட்டமோ, மோதலோ ஜெயலலிதா மேற்கொண்டதே இல்லை. அவர் அப்படிச் செய்தால் தி. மு கவுக்கும் அவரை எதிர்கொள்வது மிகவும் எளிதானதாகிவிடும். (நாளை தொடரும்)

## உலக அரங்கில்

### வளைகுடாப்போர்? இன்னமும் 4 நாட்களே!

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகருக்கும் ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸிஸ்க்கு இடையில் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியில் முடிந்ததையடுத்து இண்டாம் கட்ட சமரஸ முயற்சியில் ஐ. நா செயலாளர் நாயகம் பெரஸ்டிகுயிலர் இறங்கியுள்ளார்.

தனது முதல் நடவடிக்கையாக இவர் ஜெனீவாவில் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் பேச்சுக்கள் நடாத்தவுள்ளார்.

பேச்சுக்களின் போது குவைத்தை விட்டு ஈராக் வெளியேறினால் குவைத்தில் ஐ. நா வின் அமைதிப்படையை நிறுத்துவது குறித்து ஆராயப்படும், இதேவேளை அனைத்து நாடுகளின் சமாதான தூதுவனாக பக்தாத்சென்று சதாம் ஹுசையினை சந்திக்கவுள்ளதாக குயிலர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் ஐக்கிய அரபு எமிரேட்டுக்கும் ஜோர்தான் துருக்கி ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்கிறார்.

சமாதான முயற்சிகள் இவ்வாறு இருக்க களத்தில் இருதரப்பும் தமது படைகளை உஷாராக்கி வருகின்றன. இருபது மில்லியன் அமெரிக்க துருப்புகளும் முப்பதாயிரம் பிரிட்டிஷ் துருப்புகளும் யுத்தபகுதியின் கேந்திர நிலையங்களுக்கு நகர ஆரம்பித்தன. ஈராக்கிய விமானப்படையிலும் முன்னேற்றமான நவீனரக விமானங்களைக் கொண்ட சர்வதேச விமானப்படை விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதேவேளை தரைப்படையில் பலம் வாய்ந்ததாக கருதப்படும் ஈராக்கின் ஐம்பது மில்லியன துருப்புகள் குவைத்தின் எல்லையெங்கும் வந்து குவிகின்றன.

இதனிடையே பக்தாத்தில் முஸ்லிம் தலைவர்களின் மாநாடு ஒன்றில் பேசிய சதாம் ஹுசைன் ''நாம் இறைவனின் பெயரால் யுத்தம் ஆரம்பிக்கின்றோம் (Hollywar) இந்த யுத்தம் மூலம் பலஸ்தீனியர்களுக்கும் தனிநாடு கிடைக்கும் எமது தரப்பிலும் விட எதிரி தரப்பில் விதவைகளின் எண்ணிக்கை இந்த யுத்தம் மூலம் ஏற்படும் தரையில் படைகளை இயக்குவது குறித்து நாம் கடந்த காலங்களில் பல அனுபவ பயிற்சிகளை பெற்றுள்ளோம்'' என்றார்.

## அனுமதி பெறாமல் எவரும் சந்தைகள், இறைச்சிக்கடைதிறக்கக்கூடாது

யாழ் மாவட்டத்திலுள்ள அனுமதிக்கப்படாத சகல சந்தைகளும் இறைச்சிக்கடைகளும் இயங்குவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள்இவ்விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்து இம்மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் இவ்வா றான சந்தைகளையும் இறைச்சிக்கடைகளையும் மூடிவிட வேண்டும் என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுடிவகலாலா அறிவித்துள்ளார்.

சட்டத்திற்கு முரணான இவற்றினால் அனுமதி பெற்ற சந்தைகளினதும் கடைகளினதும் வர்த்தகர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளமையும் ஆணையாளரினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (66)

### மருதனாமடம் —

ருக்கு விடுதலைப் புலிகளால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

தமிழ்க்குழு ஒன்றுடன் சேர்ந்து கோப்பாயில் சுப்பையா என்பவர் வீட்டில் ஐம்பதாயிரம் ரூபாவும் மணியம் என்பவர் வீட்டில் பத்தாயிரம் தியாகு என்பவர் வீட்டில் இருபதாயிரம் ரூபாவும் கொள்ளை அடித்தது.

1 எஸ் எம். ஜி ,1ஏகே 47 ரகத் துப்பாக்கிகளை வைத்திருந்தது, கோப்பாய்ப் பகுதியில் விடுதலைப் புலிகளையும் ஆதரவாளர்களையும் காட்டிக் கொடுத்தது போன்ற 7 குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டது. (ப-10, 48)

### இந்திய...

க. உறுப்பினர்களும் கைகலப்பில் இறங்கும் நிலைக்கு வந்தனர். எனினும் இருதரப்பினரும் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

தமிழ் போராளிகளை காரணமின்றி அஸாம் டல்பா தீவிரவாதிகளுடன் இணைந்து பேசவேண்டாம் என தி.மு.க எம். பிக்களும் பிரதமர் பேச்சு மாநில அரசுகளை மிரட்டுவதாக உள்ளது என தேசிய முன்னணியினரும் சந்திரசேகரை குற்றஞ்சாட்டியபோதே பெரும் அமளிதுமளி சபையில் எழுந்தது.


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பிரிவு.

புதிதாக அமைக்கப்பட்ட எமது பயிற்சி, சுதேசிய பொருள் விற்பனை நிலையங்கள் திங்கட்கிழமை (14-01-1991) காலை 11. 30 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

எமது சங்க அங்கத்தவர்கள், தொண்டர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர். 01100


இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிற்ரெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடுடச்சு வீதி, 'லக்ஷ்மிபில்டிங்கில்' உள்ள அச்சகத்தில் 12-01-1991இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதி உணவுப் பற்றாக்குறை நிலவுகிறது

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உணவுப் பொருள் பற்றாக்குறையால் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

கடந்த ஏழுமாதகாலத்தில் அங்குளள ஒருவருக்கு $2\frac{1}{2}$ கிலோ உணவு மட்டுமே அரச நிவாரணமாகக் கிடைத்துள்ளது.

கிளிநொச்சியில் இடம் பெயர்ந்து வந்தோர் உட்பட ஒருலடசத்து 78 ஆயிரம் மக்கள் உள்ளனர். யுத்தம் ஆரம்பித்த காலத்திலிருந்து இதுவரை அங்கு மொத்தமாக நான்கு லட்சத்து 47 ஆயிரம் கிலோ உணவுப் பொருட்கள் மட்டுமே நிவாரணமாக அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அரசசார்பற்ற நிறுவனங்களும் யாழ்ப்பாணத்திலிருந்தே இயங்குவதால் தமது கஷ்ட நிலையை இவர்களுக்கு புரிவதில்லை என்றும் செயலக அதிகாரிகள் இவ்விடயத்தில் போதிய ஆர்வம் காட்டவில்லைஎனவும் பொது மக்களால் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தாய்மார்களும் குழந்தைகளும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதை அகதி முகாம்களுக்குள்ளும், வெளியேயும் அவதானிக்க முடிகிறது.

இந் நிலை நீடிக்குமானால் இவர்கள் இரத்தச்சோகை நோய்க்குள்ளாக்கப்பட்டு பெரும் துன்பத்தை அடைய நேரிடும் எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (66)

## பிரிட்டிஷ் தூதரக அதிகாரியின் மகள் கார்விபத்தில் உயிரிழந்தார்

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரக முதல் செயலாளர் கெவின் ஜேம்ஸின் மகள் கார் வ்பத்தின் போது உயிரிழந்த சம்பவம் நேற்று முன் தினம் நிகழ்ந்துள்ளது;

ரிட் அவனியூவில் இந்த யுவதியும் வேறு இருவரும் பயணம் தெய்த கார் வளைவில் திரும்புகையில் கம்பத்துடன் மோதியதால் இந்த விபரீதம் ஏற்பட்டது.

படுகாயமடைந்த இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின்னர் மரணமானார். (ப-11)

## திலகர் பி. பி. ஸிக்கு பேட்டி
## தான் இனவாதி என்பதை அரசு காட்டிவிட்டது

ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவ நடவடிக்கையை மீண்டும் ஆரம்பித்ததன் மூலம் தான் ஓர் இனவாதி என்பதை உலகிற்கு காட்டிவிட்டது. இவ்வாறு விடுதலைப்புலிகளின் பிரமுகர் திலகர் நேற்று பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை கண்ணியமாகவே கடைப்பிடித்துவந்தனர் தலைவர் பிரபாகரன் பிராந்தியதளபதிகளுக்குஇராணுவம் ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் இறங்கினாலும் யுத்த நிறுத்தத்தை மீறவேண்டாம் என பணித்திருந்தார். ஆனால் அரச படைகள் கடந்த ஏழு நாட்களில் தனது நடவடிக்கைகள் மூலம் ஐந்து பொதுமக்களையும் ஒரு போராளியையும் கொன்றுள்ளதாக திலகர் சுட்டிக்காட்டினார்.

### இராணுவம்...

அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட டுள்ளது.

காணாமல் போன ஆசிரியர், மாணவர் மற்றும் சேதமடைந்த பாடசாலை கட்டிடங்கள், தளபாடங்கள் என்பவற்றின் விபரங்களையும், திரட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி. ப, 4 மணிக்கு முன்னர் தம்மிடம் ஒப்படைக்குமாறும் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (74)

### யுத்த ..

★புலிகள் ஆயுதம் வைத்திருக்கக் கூடாது இதற்கான தடையுத்தரவு கொண்டுவரப்படும்.

★பேச்சுக்கள் ஆரம்பித்தால் அதில் சகல கட்சிகளும் கலந்து கொள்ளும்.

★விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட சகலரும் விடுவிக்கப்பட வேண்டும், அவர்களை பார்வையிடவும் அனுமதிக்க வேண்டும்.

★இயக்கத்திற்கு ஆட்சேர்ப்பை கைவிடல் வேண்டும்.

இந்நிபந்தனைகளை புலிகள் ஏற்றுக் கொண்டாலே ஸ்ரீலங்கா அரசு போர் நிறுத்தம் செய்து புலிகளுடன் பேச்சு நடத்த முன்வரும் என அமைச்சர் ரஞ்சன்விஜேரட்ன குறிப்பிட்டார்

### 'அஸ்பிறின்'

றோர் 'அஸ்பிறின்' வில்லைகளை பத்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு கொடுப்பதால் அவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயத்தில் பெற்றோர்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என இவ் வட்டாரங்கள் வலியுறுத்தின. (74)

## கால்நடைகளை கட்டாக்காலியாக திரிய விட வேண்டாம்

நெல் வயல்களில் அல்லது ஏனைய தோட்டங்களில் பயிர்களை மேலும் கால்நடைகள் கட்டாக்காலியாக பொது இடங்களில் உலவும் கால் நடைகள் ஆகியன கட்டுப்படுத்தப்படாவிடின் அவற்றை கட்டுப்படுத்தும் விதிகள் டிசம்பர் மாதம் மூதலாம் திகதி முதல் அமுலிற்கு வந்துள்ளது என்றும் இதற்கான சுற்று நிருபம் ஏற்கனவே கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தமிழீழ ஆய்வு நிறுவன மையப் பணியகம் அறிவித்துள்ளது.

ஒவ்வொரு கிராமிய உற்பத்திக் குழுவிலுமிருந்து ஐந்து பேர் கொண்ட குழு கால் நடைகளை கட்டுப்படுத்துவதற்காக தெரியப்படும்' தோட்டக்காரரோ, கால் நடை பிடிப்பாளரோ இக் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்கலாம். பிடிக்கப்பட்ட கால்நடைகல் மேற்படி தெரிவு செய்யப்பட்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இக் குழு பகிரங்கமாக அமைக்கப்பட்ட பராமரிப்பு இடத்தில் கால்நடைகளைப் பராமரிக்கும் மாடு ஒன்றிற்கு 10 ரூபாவும் ஆடு ஒன்றிற்கு 5ரூபாவும்நாளாந்த பராமரிப்பு செலவாக அறவிடப்படும் என்றும் விபரிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளைப் பிடிப்பவர் குழுவிடம் கால்நடைகளை ஒப்படைத்தபின் கால்நடையின் சொந்தக்காரருக்கு குழுவின் செயலாளர் அறிவிப்பார். கால்நடையால் ஏற்பட்ட சேதப் பெறுமதி கால்நடை பிடிபட்ட இரண்டு நாட்களுள் உரியவரிடம் பெற்று கால்நடை கையளிக்கப்படும் சேதமதிப்பீடு குழுவினால் மதிப்பிடப்படும்.

2 நாட்களுள் உரியவர் தொடர்பு பெற முடியாவிடின் அதன் நிறம்,குறி, வயது. பால் ஆகிய விபரங்களுடன் பிரசித்த அறிவிப்பு செய்யப்படும். பிரசித்த அறிவடபின் பின்னரும் உரியவர் அறியப்படாவிடின் 10 நாட்களில் பின் பகிரங்க ஏலத்தில் இக் கால் நடைகள் விற்கப்படும். ஏலத்தில் மூலம் பெறப்படும் பணத்தில் செலவு கழிய மீதி தமிழீழ ஆய்வு நிறுவனத்துக்குச் சேரும். பிடிகாரர் மாடு ஒன்றிற்கு 50 ரூபாவும் ஆடு ஒன்றிற்கு 25 ரூபாவும் கூலியாகப் பெறுவர். குற்றப்பணம் மாடு ஒன்றிற்கு 50 ரூபாவும் ஆடு ஒன்றிற்கு 25 ரூபாவும் செலுத்தப்பட வேண்டும்.

இன்றைய இச்சூழ்நிலையில் ஒவ்வொரு பயிரும் பெறுமதி மிக்கவை. ஆகவே கால்நடைகளை கட்டாக்காலியாக திரியவிடாது உற்பத்திவளம் காப்பாற்ற ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் என்றும் இதில் மேலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (71)

### நேற்றுக்காலை .

மடைந்தார். நேற்றுக்காலை 6. 30 மணியளவில் முல்லைத்தீவு ராணுவ முகாம் சூழலில் இரண்டு பொம்மர்கள் தாக்குதலை நடத்தின, கடற்படை படகுகள் குடிமனைகள் நோக்கி தாக்குதல் நடாத்தின இச் சமயம் ராணுவம் புலிகளின் காவலரண் நோக்கி தாக்குதல் நடத்திவிட்டு திரும்பிச் சென்றனர். வவுனியா காமினி முகாம் ராணுவத்தினரும் மன்னார் தளளாடி முகாம் ராணுவமும் முன்னேறிவந்து புலிகளின் காவலரண்களை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு திரும்பிச் சென்றுள்ளனர்.

இதே சமயம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்டூரில் இருந்து கல்முனை வைத்தியசாலைக்கு சென்றுகொண்டிருந்த கண்ணமுத்து தினகரத்தினம் என்பவரை இராணுவத்தினர் ரயர் போட்டு உயிருடன் எரித்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்றுமட்டு நகரைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயான மாணிக்கம் சின்னமுத்து (35) என்பவர் ரெலோ இயக்கத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். (71)

### கிளி-மருத்துவ ..

வடிக்கையால் சேதமடைந்த இந்த ஆஸ்பத்திரியை புனரமைக்கவும், மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கும் இந்தப் பணம் பாவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

### வவுனியாவில் ...

யும் மேற்கொண்டனர். இதனால் நால்வர் காயமடைந்தனர். (ப- 11)